## May 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இருதரப்பு பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பாகிஸ்தானில் சீனா முன்னெடுத்து வரும் சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தட திட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

(i) இத்திட்டத்தின்கீழ், பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தில் இயங்கிவந்த சீன நிறுவனமான 'ஹாங்கெங்', பாகிஸ்தான் மற்றும் சீனாவில் தனது செயல்பாடுகளை கடந்த முதல் முழுமையாக நிறுத்திக்கொண்டதாக அறிவித்துள்ளது.

(ii) கொள்கை ரீதியிலான நிச்சயமற்ற தன்மை மற்றும் செயல்பாட்டு ரீதியிலான முட்டுக்கட்டைகளே இம்முடிவுக்குக் காரணமாக அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

(iii) சர்வதேச உணவுப் பாதுகாப்பு தர நிலைகளைப் பின்பற்றியும், சீன சுங்கத் துறையின் விதிமுறைகளை நிறைவேற்றியும் கூட, நிறுவனத்தின் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிகள் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(iv) கடந்த 3 மாதங்களாக மின்சாரம், தொழிலாளர் ஊதியம், தாமதக்கட்டணங்கள் எனப் பெரும் நிதி இழப்பைச் சந்தித்த போதிலும், அனுமதி கிடைக்காததால் செயல்பாடுகள் முடங்கியுள்ளதாக நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

(v) பாகிஸ்தான் அரசு ஆதரவளித்த போதிலும், அடிப்படை நிலையில் நிலவும் சிக்கல்கள் மற்றும் ஒழுங்குமுறை தடைகள் முதலீட்டுக்கு உகந்த சூழலை அந்நாட்டில் சீர்குலைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vi) இவ்விவகாரம் குறித்து இந்திய உளவுத் துறை வட்டாரங்கள் கூறுகையில், 'பலூசிஸ்தான் பகுதியில் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சீரற்ற கொள்கை முடிவுகள் சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையைத் தகர்த்துள்ளன. உள்ளூர் எதார்த்தங்களைப் புறக்கணித்து செயல்படுத்தப்படும் இது போன்ற திட்டங்கள் நீண்ட காலத்துக்கு நிலைக்காது என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை இந்நிகழ்வு உறுதிப்படுத்துகிறது' என்றனர்.

2. அமெரிக்காவின் பிரபல 'பட்ஜெட் விமான நிறுவனமான 'ஸ்பிரிட் ஏர்லைன்ஸ், நிதி நெருக்கடி காரணமாக சுமார் 34 ஆண்டுகால தனது சேவையைத் தொடர முடியாமல் சனிக்கிழமை முதல் அதிகாரபூர்வமாக நிறுத்திக்கொண்டது.

(i) இதையடுத்து, உலகம் முழுவதும் இயக்கப்பட்டு வந்த நூற்றுக்கணக்கான விழானங்கள் ரத்து செய்யப்பட்டன. பயணச்சீட்டுக் கட்டணத்தைத் திரும்பப் பெற பயணிகள் விண்ணப்பிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ள போதிலும், மாற்று விமானங்களை ஏற்பாடு செய்து தர இயலாது என நிறுவனம் கைவிரித்துவிட்டது.

(ii) தனித்துவமான மஞ்சள் நிற விமானங்கள் மற்றும் மிகக் குறைந்த கட்டணங்கள் மூலம் விமான போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்திய இந்நிறுவனம், தற்போது வரலாறு காணாத நஷ்டத்தில் சிக்கியுள்ளது.

(iii) கரோனா பெருந்தொற்றுக்கு பிறகு ஏற்பட்ட தொடர் நஷ்டமும்; ஈரான் போர் காரணமாக விமான எரிபொருள் விலை விண்ணைத் தொட்டதுமே நிறுவனத்தை இந்த நிலைக்குத் தள்ளியது.

(iv) கடந்த 2020 முதல் சுமார் 250 கோடி டாலர் இழப்பைச் சந்தித்த இந்நிறுவனம், ஏற்கெனவே 2 முறை திவாலானதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(v) தற்போது 810 கோடி டாலர் கடனில் சிக்கித்தவிப்பதால் சேவையை முழுமையாக நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என நிறுவனம் தெரிவித்துள்ளது.

(vi) சுமார் 17,000 ஊழியர்களைக் இந்நிறுவனத்தை கொண்ட அதிபர் அரசுடைமையாக்க, டிரம்ப் நிர்வாகம் முன்வைத்த திட்டத்தை ஸ்பிரிட் நிர்வாகம் ஏற்கவில்லை. போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத நிலையில், அரசின் பிணை எடுப்புத் திட்டமும் கைகூடாததால் நிறுவனம் முடங்கியது.

(vii) 34 ஆண்டுகள் சேவையில், ஒருமுறை கூட உயிரிழப்புடன் கூடிய விபத்துகளைச் சந்திக்காத பாதுகாப்புச் சாதனை ஸ்பிரிட் ஏர்லைன்ஸ் வசமுள்ளது குறிப்பிடத்தக்கது.

3. ஈரான் மீது கடந்த பிப். 28 தொடங்கிய ராணுவ நடவடிக்கைகள், போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து ஏற்கெனவே முடிவுக்கு வந்துவிட்டது' என அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் அதிகாரபூர்வமாக

அறிவித்துள்ளார்.

(i) அமெரிக்காவின் 1973-ஆம் ஆண்டு போர் அதிகாரச் சட்டத்தின்படி, நாடாளுமன்ற அனுமதியின்றி ஒரு அதிபர் 60 நாள்கள் மட்டுமே ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அந்த 60 நாள்கள் கெடு வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்த நிலையில், போரை நிறுத்தவோ அல்லது கூடுதல் கால அவகாசம் கோரவோ வேண்டிய கட்டாயத்தில் டிரம்ப் இருந்தார்.

(ii) ஆனால், தற்போது நாடாளுமன்றத் தலைவர்களுக்கு டிரம்ப் எழுதிய கடிதத்தில், 'போர் முடிந்துவிட்டது' என்று அறிவித்திருப்பதன் மூலம், மீண்டும் மோதலைத் தொடர நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற அவசியமில்லை என்ற நிலையை உறுதிப்படுத்த அவர் முயன்று வருகிறார்.

(iii) ஈரான்-அமெரிக்கா இடையே நேரடி தாக்குதல்கள் எதுவும் சமீபத்திய நாள்களில் நடைபெறவில்லை என்பதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள டிரம்ப், 1973-ஆம் ஆண்டு சட்டம் அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. தலைமைத் தளபதியாக எனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிறது' என விமர்சித்துள்ளார்.

(iv) டிரம்ப்பின் இந்த அறிவிப்பை எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் கடுமையாகச்சாடி வருகின்றனர். 'இந்தப் போர் நிறுத்தத்தைச் சட்டபூர்வமாக ஏற்க முடியாது. ஈரான் கப்பல்களை அமெரிக்க படையினர் தடுத்து நிறுத்திவைத்திருப்பதே போர் நீடிப்பதற்கான சாட்சி' என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

(vi) அமெரிக்காவில் நவம்பரில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, இப்போர் அரசியல் விவாதமாகவும் மாறியுள்ளது. கருத்துக்கணிப்புகளின்படி, இப்போர் நடவடிக்கைகளில் அமெரிக்க மக்களிடையே அதிருப்தி நிலவி வருகிறது.

(vii) பேச்சுவார்த்தையில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படாவிட்டாலும், இருதரப்புக்கு இடையிலான மோதல் போக்கு கடல் வழி முற்றுகையாக மட்டும் நீடிக்கிறது.

(viii) இதனிடையே, ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பது, அமெரிக்காவின் கடல் வழி முற்றுகையை விலக்குவது போன்ற அம்சங்களுடன் ஈரான் முன்வைத்த புதிய சமரசத் திட்டத்தையும் 'திருப்தியளிக்கவில்லை' என டிரம்ப் நிராகரித்தார்.

(ix) ஏனெனில், இந்தமுன் மொழிவிலும் அணுசக்தித் திடடம் குறித்த பேச் சுவார்த்தையை ஒத்திவைக்க ஈரான் கோரியுள்ளது. அந்தவகையில், தற்போது போர் முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டாலும், ஈரான் இன்னும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக இருப்பதாக டிரம்ப் கூறியுள்ளார். ஒருவேளை மீண்டும் மோதல் வெடித்தால், புதிய 60 நாள்கள் கெடுவுடன் ராணுவத் தாக்குதல்களைத் தொடர வெள்ளை மாளிகை திட்டமிட்டுள்ளது.

4.ஈரான் போர்ச்சூழலைக் கருத்தில் கொண்டு இஸ்ரேல், கத்தார், குவைத், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளுக்கு சுமார் 860 கோடி டாலர் மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்வதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

(i) இதன்படி, கத்தாருக்கு 'பேட்ரியாட்' வான்பாதுகாப்பு அமைப்பும், குவைத்துக்கு 'ஒருங்கிணைந்த போர் கட்டுப்பாட்டு மைய' அமைப்பும், இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு நவீன ரக ஏவுகணைகளும் வழங்கப்படவுள்ளன.

(ii) இத்தகைய ராணுவத் தளவாட விற்பனைக்கு நாடாளுமன்றத்தின் ஆய்வு மற்றும் அனுமதி வழக்கமாக தேவைப்படும் நிலையில், தற்போதைய சூழலை 'அவசரகால நிலை' எனக் குறிப்பிட்டு, வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ இந்த விதிகளில் இருந்து விலக்கு அளித்துள்ளார்.

5.ஈரான் விவகாரத்தில் அமெரிக்க போர் வியூகத்தை ஜெர்மனி பிரதமர் ஃப்ரைட்ரிச் மெர்ஸ் விமர்சித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டில் இருந்து சுமார் 5,000 அமெரிக்க படை வீரர்களை அடுத்த 6 முதல் 12 மாதங்களுக்குள் திரும்பப் பெற அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

(i) இதையொட்டி, ஐரோப்பாவின் பாதுகாப்பில் ஐரோப்பிய நாடுகளே கூடுதல் பொறுப்பேற்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது' என ஜெர்மனி வலியுறுத்தியுள்ளது. எனினும், இம்முடிவு நேட்டோ வலிமையைக் குறைப்பதோடு, ரஷியாவுக்கு சாதகமாக அமையும் என அமெரிக்க எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர்.

6. ரிசர்வ் வங்கியின் புதிய துணை ஆளுநராக ரோஹித் ஜெயினை மத்திய அரசு நியமித்தது.

(i) தற்போது துணை ஆளுநராக உள்ள டி.ரவி சங்கரின் பதவிக் காலம் சனிக்கிழமையுடன் நிறைவடைந்ததையடுத்து, அவரின் இடத்துக்கு ரோஹித் ஜெயின் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ii) ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநராகப் பணியாற்றி வந்த ரோஹித் ஜெயின், புதிய பொறுப்பில் 3 ஆண்டுகள் நீடிப்பார்.

(iii) 1934-ஆம் ஆண்டு சட்டத்தின்படி, ரிசர்வ் வங்கிக்கு 4 துணை ஆளுநர்கள் இருக்க வேண்டும். ஜே.சுவாமிநாதன், பூனம் குப்தா, எஸ்.சி.முர்மு ஆகியோர் மற்ற 3 துணை ஆளுநர்களாகப் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

7. அதானி, ஏர்டெல் நிறுவனங்களுடன் இணைந்து ஆந்திரத்தின் விசாகப்பட்டினத்தில் சுமார் ரூ.1.42 லட்சம் கோடி மதிப்பீட்டில் பிரம்மாண்ட ஏ.ஐ. தரவு மையத்தை கூகுள் அமைக்கத் தொடங்கியுள்ளது. இது இந்தியாவின் எண்ம உள்கட்டமைப்பில் மிகப்பெரிய முதலீடுகளில் ஒன்றாகும்.

8. மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் உக்ரைன் வீராங்கனை மார்த்தா கொஸ்டியுக் பட்டம் வென்றார். இது அவருக்கு டபிள்யுடிஏ 1000 போட்டியில் முதல் பட்டமாகும்.

9. கர்நாடகத்தில் பறவைக் காய்ச்சலுக்கு 44 மயில்கள் உயிரிழந்துள்ளன.

(i) கர்நாடக மாநிலம், தும்கூரு மாவட்டத்தில் 44 மயில்கள் திடீரென இறந்தன. இதற்கான காரணம் தெரியாத நிலையில், இறந்த மயில்களின் உடல்கள் போபாலில் உள்ள தேசிய உயர்பாதுகாப்பு விலங்கு நோய்கள் மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அது தொடர்பான ஆய்வறிக்கையில், 44 மயில்களும் எச்5என்1 எனப்படும் பறவைக் காய்ச்சலால் இறந்துவிட்டதாக வனத் துறை அமைச்சர் ஈஸ்வர் கண்ட்ரே தெரிவித்தார்.

10. ஜமைக்கா, சுரினாம், டிரினிடாட் - டொபேகோ ஆகிய 3 கரீபியன் நாடுகளுக்கு 9 நாள்கள் அரசு முறைப் பயணமாக வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் புறப்பட்டார்.

(i) இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், மே 2-ஆம் தேதி முதல் மே 10-ஆம் தேதி வரை ஜமைக்கா, சுரினாம், டிரினிடாட் - டொபேகோ ஆகிய நாடுகளுக்கு அமைச்சர் ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

(ii) இந்த நாடுகளில் இந்தியவம்சாவளியினர் வசிப்பதால் இந்தியா சிறப்பு பிணைப்பைக் கொண்டுள்ளது. 3 கரீபியன் நாடுகளுடன் பல ஆண்டுகளாக இந்தியா நட்புறவை பேணி வருகிறது. அரசியல் மற்றும் தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டின் தொடர்ச்சியாகவே அமைச்சர் ஜெய்சங்கர் இந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

(iii) பயணத்தின்போது ஜமைக்கா, சுரினாம், டிரினிடாட் டொபேகோ நாடுகளின் தலைவர்களை சந்தித்து இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து அவர் ஆலோசிக்கவுள்ளார். மேலும், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களும் அவரது ஆலோசனையில் இடம்பெறவுள்ளது.

(iv) பயணத்தின் ஒரு பகுதியாக இந்நாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் மற்றும் தொழிலதிபர்களை சந்தித்து அமைச்சர் ஜெய்சங்கர் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(v) பிரிட்டிஷ் ஆட்சியின்போது இந்தியாவில் இருந்து தென் ஆப்பிரிக்கா, ஃபிஜி, மோரீஷஸ் மற்றும் கரீபியன் தீவுகளில் உள்ள தோட்டங்களுக்கு ஏராளமானோர் ஒப்பந்தத் தொழிலாளர்களாக அனுப்பப்பட்டனர். கொத்தடிமைகளாக அந்நாடுகளுக்குச் சென்ற அவர்களில் பலர், சுதந்திரத்துக்குப் பிறகு உன்னத நிலைகளை அடைந்துளளனர்.

11. செயற்கை நுண்ண்றிவு தொழில்நுட்பத்தின் (ஏ.ஐ.) வருகையால், வேலை வாய்ப்பு துறையில் இந்தியாவுக்கு புதிய சவால் உருவெடுத்திருப்பதாக தலைமை பொருளாதார ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். தில்லியில் அசோகா பல்கலைக்கழகம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று இதுகுறித்து அவர் பேசியதாவது:

(i) மேற்காசிய போரின் காரணமாக, இந்தியா விநியோக சவால்களைக் காட்டிலும் (கச்சா எண்ணெய்) விலை ஏற்றம் தொடர்பான சவாலையே அதிகம் எதிர்கொண்டு வருகிறது. இது போன்ற கடினமான காலத்தை எதிர்கொள்ள இந்தியா மிகப்பெரிய அளவில் சேமிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அவசியம். இந்த சேமிப்பு அமைப்புகள், கச்சா எண்ணெய்க்கு மட்டும் பொருந்தாது. இதில் எரிவாயுவும் அடங்கும். அதேபோல், இந்த சமயத்தை பயன்படுத்தி, நாம் அதிகம் இறக்குமதியை சார்ந்திருக்கும் பொருள்கள் மற்றும் நிக்கல், தாமிரம் உள்ளிட்டவற்றையும் மிகப்பெரிய அளவில் சேமித்து வைக்கும் அமைப்புகளை உருவாக்குவது குறித்து யோசிக்க வேண்டும்.

(ii) ஏ.ஐ. வருகையால் இந்தியாவுக்கு வேலைவாய்ப்பு தொடர்பான சவால் உருவாகியுள்ளது. ஆதலால் ஏ.ஐ.தொழில்நுட்பத்துடன் போட்டியிடும் வகையில் தகவல் தொழில்நுட்ப துறை மாற்றப்படுவதையும், ஏ.ஐ.யிடம் வேலை வாய்ப்புகளை இழக்காததையும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல், தகவல் தொழில்நுட்பத் துறைக்குள்ளும், பிற சேவைத் துறைகளிலும் ஏ.ஐ.யை பயன்படுத்தும் வகையில் நாம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

(iii) மேற்காசிய போரின் காரணமாக, சர்வதேச அளவில் உரம் மற்றும் பெட்ரோலிய பொருள்களின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது. இது நடப்பு கணக்கு பற்றாக்குறையை இந்த நிதியாண்டில் 4.3 சதவீதமாக குறைக்க வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கு சவாலாக மாறியுள்ளது.

(iv) மேலும், குறைவான பருவ மழை, எரிசக்தி விலை அதிகரிப்பு ஆகியவை பணவீக்கத்தையும் கணிசமாக அதிகரிக்கும் என்றார்.

12. மத்திய அரசின் ஒலி- ஒளிபரப்பு நிறுவனங்களை (அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன்) கட்டுப்படுத்தும் மத்திய பொதுத்துறை நிறுவனமான பிரசார் பாரதியின் புதிய தலைவராக பிரபல பாடலாசிரியரும் எழுத்தாளருமான பிரஸூன் ஜோஷியை மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் நியமித்தது. இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:

(i) இலக்கியம், விளம்பரம், சினிமா, மக்கள் தகவல் தொடர்பு ஆகிய துறைகளில் விரிவான பங்களிப்புகளை வழங்கியவர் பிரஸூன் ஜோஷி. தொழில் முறை படைப்பாற்றல் நிபுணரான அவர், தனது எழுத்து மற்றும் ஆழமான கலாசார உணர்வு மூலம் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவராக அறியப்படுபவர்.

(ii) சமகால இந்திய ஊடகங்களை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றியவர். அவரது பணிகள் சமூக உணர்வைத் தட்டியெழுப்பும் வகையில் அமைந்தன. அவரது திரைப்படப் பாடல் வரிகள், வடிவமைத்த விளம்பரப் பரப்புரைகள் பலதரப்பட்ட மக்களை இணைத்தன.

(iii) பிரஸூன் ஜோஷி, பிரசார் பாரதி தலைவராக நியமிக்கப்படும் முன்பு 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் மும்பையில் உள்ள மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியத்தின் தலைவராகப் பணியாற்றினார். அதற்கு முன்னதாக, அவர் மெக்கான் வோர்ல்ட் குரூப் நிறுவனத்தின் இந்திய தலைமைச் செயல் அதிகாரியாகவும், அதே நிறுவனத்தின் ஆசிய பசிஃபிக் (மெக்கான் எரிக்சனின் துணை நிறுவனம்) தலைவராகவும் பணியாற்றினார்.

(iv) 2016-ஆம் ஆண்டு முதல் இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் அறங்காவலர்களில் ஒருவராகவும் பிரஸூன் ஜோஷி இருந்தார். 2001-ஆம் ஆண்டு முதல் ஹிந்தி திரைப்படங்களுக்குப் பாடல்கள் இயற்றி வரும் இவர், திரைக்கதாசிரியரும் ஆவார்.

13. சீனா மற்றும் ஹாங்காங்கை சேர்ந்த பங்குதாரர்களின் பங்குகளில் 10 சதவீதம் வரை வைத்திருக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் நேரடியாக இந்தியாவில் முதலீடு செய்ய அனுமதிக்கும் நடைமுறை மே 1 முதல் அமலுக்கு வந்துள்ளது.

(i) அந்நிய செலாவணி மேலாண்மை சட்ட விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை மத்திய நிதியமைச்சகம் அதிகாரபூர்வமாக அறிவித்ததன் மூலம், இந்த நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

(ii) முன்பு இந்தியாவுடன் நில எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளைச் சேர்ந்த பங்குதாரர்கள் வெளிநாட்டு நிறுவனங்களில் ஒரே ஒரு பங்கை வைத்திருந்தாலும், அந்த நிறுவனங்கள் இந்தியாவின் எந்தவொரு துறையிலும் முதலீடு செய்ய மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியிடம் கட்டாயம் முன் அனுமதி பெற வேண்டும்.

(iii) இந்நிலையில், தற்போது சீனா மற்றும் ஹாங்காங்கை சேர்ந்த பங்குதாரர்களின் பங்குகளில் 10 சதவீதம் வரை வைத்திருக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் நேரடியாக இந்தியாவில் முதலீடு செய்யலாம்.

(iv) அந்நிய நேரடி முதலீட்டில் தளர்த்தப்பட்டுள்ள இந்த விதிகள் சீனா, ஹாங்காங் அல்லது இந்தியாவுடன் நில எல்லைகளை பகிர்ந்துகொள்ளும் பிற நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்தாது. அங்கு பதிவு செய்யப்படாத வெளிநாட்டு நிறுவனங்கள்தான் முன் அனுமதி இல்லாமல் நேரடியாக இந்தியாவில் முதலீடு செய்யலாம்.

(v) சீனா, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், பூடான்,மியான்மர், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்துள்ளன.

14. பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை (பிடிஏ) இறுதி செய்ய இந்தியா மற்றும் ஈக்வடார் தீவிரம் காட்டி வருகின்றன.

(i) இந்தியாவுக்கு இரு நாள் சுற்றுப்பயணமாக ஏப். 29, 30 ஆகிய தேதிகளில் வந்த ஈக்வடார் வெளியுறவு அமைச்சர் கேப்ரியேலா சோமர்ஃ பெல்ட் ரோசெரோ இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

(ii) இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘இந்தியா-ஈக்வடார் இடையே வர்த்தகம் மற்றும் மூலதனம், சுகாதார நலன், மருந்தியல், கல்வி, வேளாண்மை மற்றும் எண்மத் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்த இருநாட்டு அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(iii) அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது இந்திய சூரியசக்தி கூட்டமைப்பு (ஐஎஸ்ஏ) மற்றும் சர்வதேச பெரும் பூனை கூட்டமைப்பில் (ஐபிசிஏ) இணைவதற்கான அதிகாரபூர்வ கடிதத்தை ஈக்வடார் வெளியுறவு அமைச்சர் கேப்ரியேலா சோமர்ஃபெல்ட் ரோசெரோ வழங்கினார்.

(iv) அதன்பிறகு விரைவான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை (கியூஐபி) செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருவரும் கையொப்பமிட்டனர். இத்திட்டத்தின்கீழ் அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஈக்வடாரில் சமூக-பொருளாதார திட்டங்களை அமல்படுத்த ரூ.12 கோடி நிதியை இந்தியா வழங்கவுள்ளது.

(v) பயணத்தின் ஒரு பகுதியாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயலை கேப்ரியேலா சோமர்ஃபெல்ட் ரோசெரோ சந்தித்தார். அப்போது இரு நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த வழிவகுக்கும் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வது தொடர்பாக இருவரும் ஆலோசித்தனர்.

(vi) மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி.நட்டாவை கேப்ரியேலா சோமர்ஃபெல்ட் ரோசெரோ சந்தித்தபோது இந்தியா-ஈக்வடார் இடையே சுகாதாரத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவது குறித்து விவாதிக்கப்பட்டது' எனத் தெரிவிக்கப்பட்டது.

15. மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் காப்பீட்டுத் துறையில் 100 சதவீதம் அந்நிய நேரடி முதலீட்டை (எஃப்டிஐ) முதலீட்டாளர்கள் மேற்கொள்வதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டது.

(i) அதேவேளையில் அந்நிய செலாவணி மேலாண்மை (இரண்டாவது திருத்தம்) விதிமுறைகள் 2026-இன்படி, மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் காப்பீட்டு நிறுவனங்களில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்டாலும், ஆயுள் காப்பீட்டு கழகத்தில் (எல்ஐசி) அந்நிய நேரடி முதலீட்டை 20 சதவீதம் வரை மட்டுமே மேற்கொள்ள முடியும்.

(ii) முன்பு மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல், காப்பீட்டுத் துறையில் 74 சதவீதம் வரை அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு டிசம்பரில் சப்கா பீமா சப்கி ரக்ஷா (காப்பீட்டு சட்டங்கள் திருத்தம்) மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இதையடுத்து அந்த முதலீட்டு வரம்பு 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, மசோதா சட்டமானது.

16. தமிழக சிறைகளில் ஆணிகள் முற்றிலும் அகற்றப்பட்டுள்ளன. இனி புதிதாக சுவரில் ஆணிகள் அடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கைதிகள் தற்கொலைகளைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை சிறைத் துறை நிர்வாகம் எடுத்துள்ளது.

**சிறைகளும் தற்கொலைகளும்**

| ஆண்டு | இந்தியா | தமிழகம் |
|---|---|---|
| 2016 | 102 | 9 |
| 2017 | 109 | 9 |
| 2018 | 129 | 10 |
| 2019 | 116 | 4 |
| 2020 | 156 | 8 |
| 2021 | 150 | 4 |
| 2022 | 119 | 5 |
| 2023 | 96 | 4 |

(i) தேசிய அளவில் தற்கொலைகள் அதிகம் நடைபெறும் சிறைகளில் முதல் 8 இடங்களுக்குள் தமிழக சிறைகள் உள்ளன. நாடு முழுவதும் 2016-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரையில் சிறைகளில் 977 கைதிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதில் தமிழக சிறைகளில் மட்டும் 53 கைதிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

(ii) நாடு முழுவதும் சிறைகளுக்குள் பதிவாகும் மொத்த கைதிகளின் உயிரிழப்புகளில் 80 சதவீதம் தற்கொலையால் நடப்பவை. சிறைக் கைதிகளில் மூன்றில் இரண்டு பங்கினர் கவலை, நம்பிக் கையின்மை, விரக்தி, வேதனை, தனிமை போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் சுமார் 12 சதவீத கைதிகள் மனச்சோர்வுடன் இருப்பதாகவும், மனநோய் பரவல் கைதிகளிடம் 25 சதவீதத்துக்கு மேல் இருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. இதுபோன்ற காரணங்களால் சிறைகளில் கைதிகள் தற்கொலைக்கு முயல்வது தொடர்ந்து கொண்டே இருப்பதாகவும் பல்வேறு ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

(iii) தமிழகத்தில் அதிகம்:

- தமிழகம் முழுவதும் உள்ள 9 மத்திய சிறைகள் உள்பட 141 சிறைகளில் 24,513 கைதிகளை அடைக்க கட்டமைப்புகள் உள்ளன. தற்போது தமிழக சிறைகளில் 16,000 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். 2018-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை கைதிகள் தற்கொலை முயற்சி சம்பவங்கள் பதிவான மாநிலங்களில் தமிழகம் முதல் 5 இடங்களுக்குள் இருந்தது.
- தமிழக சிறைகளில் ஓரளவுக்கு உளவியல் நிபுணர்கள், மனநல மருத்துவர்கள் நியமிக்கப்பட்டதாலும், கைதிகளுக்கு தற்கொலை உணர்வைத் தடுக்கும் வகையில் கல்வி, கைத்தொழில், நூலகம், சுய தொழில் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு வசதி வாய்ப்புகளை சிறை நிர்வாகம் ஏற்படுத்திக் கொடுத்ததாலும் 2018-ஆம் ஆண்டுக்கு பின்னர்

கைதிகள் தற்கொலைகள் தமிழகத்தில் ஓரளவுக்கு குறைந்துள்ளன. இருப்பினும் ஆண்டுக்கு சராசரியாக 4 கைதிகள் தமிழகத்தில் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

- தற்கொலை முயற்சியில் ஈடுபடும் கைதிகளில் சுமார் 93 சதவீதம் பேர் தூக்கிட்டுக் கொள்கின்றனர். முக்கியமாக கைதிகள் தங்களது துண்டு, வேட்டி, லுங்கி போன்றவற்றால் சிறை அறைகளில் உள்ள ஆணிகளில் தூக்கிட்டு தற்கொலை செய்வது தெரிய வந்துள்ளது.
- அண்மையில் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த, போதைப் பொருள் வழக்கில் கைதான மதுரை திருப்பாலை பகுதியைச் சேர்ந்த கைதி பிரசாந்த் (24) தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்.

(iv) ஏடிஜிபி உத்தரவு:

- இந்தச் சம்பவம் குறித்து விசாரித்த தமிழக சிறைத் துறை ஏடிஜிபி கே.சங்கர், கைதிகள் அதிகமாக தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்வதையும், அதற்கு அவர்கள் ஆணிகளைப் பயன்படுத்துவதையும் உணர்ந்தார். ஏற்கெனவே சிறைத் துறை விதிமுறைகளின் அடிப்படையில் பாதுகாப்பு காரணங்களின்படி சிறைக்குள் எந்தப் பகுதியிலும் ஆணிகள் இருப்பதற்கு அனுமதியில்லை. இருந்த போதிலும், கைதிகள் அறையில் ஆடைகளை காயப் போடுவதற்கும், ஆடைகளைத் தொங்கவிடு வதற்கும் ஆணிகள் அடிக்கப்படுவதாக அவரது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.
- இதையடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துச் சிறைகளிலும் கைதிகள் அறைகள் மட்டுமன்றி, சிறை அலுவலக அறை, பார்வையாளர் அறை, உணவுக் கூடம், தொழில்கூடம், நூலகம் என அனைத்து இடங்களிலும் உள்ள ஆணிகளை அகற்றுமாறு கூடுதல் டிஜிபி உத்தரவிட்டார். இதன்படி மத்திய சிறைச்சாலை தொடங்கி கிளைச் சிறைகள் வரை என அனைத்துச் சிறைகளிலும் ஆணிகள் அகற்றும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. இதற்காக மத்திய சிறைகளில் சிறைக் காவலர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஆணிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.
- இவ்வாறு கடந்த இரு மாதங்களில் மட்டும் சுமார் 30,000 ஆணிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதேவேளையில் சிறைக்குள் எந்தப் பகுதியிலும் புதிதாக ஆணிகள் அடிப்பதற்குத் தடை உள்ளதால், அதை உறுதிப்படுத்த கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

(v) இது மட்டும் தீர்வல்ல

- ஆணிகளை அகற்றுவது போன்ற நடவடிக்கையால் கைதிகள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க முடியும் என சிறைத் துறையினர் கருதினாலும், மன அழுத்தத்தில் உள்ள கைதிகளின் தற்கொலை எண்ணத்தை மட்டுமே இது தள்ளிப்போட வைக்குமே தவிர நிரந்தரத் தீர்வாகாது என்று மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.
- ஏனெனில் கைதிகள் மத்தியில் தற்கொலை உணர்வைத் தடுத்தால் மட்டுமே, இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஆணிகளை அகற்றுவதன் மூலம் கைதிகள் தூக்கிட்டுக் கொள்வதை அந்த நேரத்தில் வேண்டுமானால் தடுக்கலாம். ஆனால், கைதிகளின் ஆழ்மனதில் நிலவும் வேதனையும் விரக்தியும் விலகாது. கைதிகள் மேலும் விபரீதமான முடிவை நோக்கித் தள்ளப்படுவதற்கே வாய்ப் புகள் அதிகம் என்றும் அவர்கள் கூறினர்.
- இதற்கு மாற்றாக கைதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உளவியல் நிபுணர்கள், மனநல மருத்துவர்கள் ஆகியோர் அதிக அளவில் நியமிக்கப்பட வேண்டும். கைதிகளுக்குத் தேவையான நேரங்களில் விடுமுறை, பரோல் வழங்கல், மாதம் ஒருமுறையாவது குடும்பத்தினர், நண்பர்களைச் சந்திப்பதை உறுதிப்படுத்துதல் போன்ற வாய்ப்புகளை சிறை நிர்வாகம் பரிசீலிக்கலாம். ஆயுள் கைதிகள் சரியான காலகட்டத்தில் விடுதலையாவதற்கும், சிறையில் அனைத்துப் பகுதிகளிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனித உரிமை ஆர்வலர்கள் யோசனை தெரிவிக்கின்றனர்.